# பெண் சக்திக்கு எடுத்துக்காட்டு சந்திரயான்-3

**புது தில்லி, ஆக. 27:** பெண்கள் சக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாக 'சந்திரயான்-3' திட்டம் திகழ்வதாக 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி வாயிலாக நாட்டு மக்களிடம் பிரதமர் மோடி உரையாற்றி வருகிறார். அதன்படி, ஞாயிற்றுக்கிழமை ஒலிபரப்பான 'மனதின் குரல்' நிகழ்ச்சியில் அவர் கூறியதாவது:

நவீன இந்தியாவின் புதிய அடையாளமாக 'சந்திரயான்-3' மாறியுள்ளது. எத்தகைய கடினமான சூழலையும் எதிர்கொண்டு, வெற்றி அடைவதற்கான ஊக்கத்தை அத்திட்டம் வழங்குகிறது. பெண்கள் சக்தி ஒன்றிணைந்தால், அடைய முடியாத இலக்கையும் எட்டிவிட முடியும். பெண்கள் சக்திக்கு சிறந்த எடுத்துக்காட்டாக 'சந்திரயான்-3' திட்டம் திகழ்கிறது.

பல பெண் விஞ்ஞானிகளும் பொறியாளர்களும் அத்திட்டத்தின் வெற்றிக்கு நேரடியாகப் பங்காற்றியுள்ளனர். திட்ட துணை இயக்குநர், திட்ட மேலாளர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளைப் பெண்கள் வகித்தனர். எல்லையற்றதாக அறியப்படும் விண்வெளிக்கும் இந்திய பெண்கள் தற்போது சவால் விடுத்து வருகின்றனர். பெண்கள் ஊக்கத்துடன் பணியாற்றினால், வளர்ச்சியடைந்த நாடாக இந்தியா மாறுவதை எவரால் தடுக்க முடியும்?

**நிலவில் உதித்த 'சூரியன்':** சந்திரயான்-3 நிலவை அடைந்து 3 நாள்கள் ஆகிவிட்டன. அத்திட்டத்தின் மகத்தான வெற்றி குறித்து எவ்வளவு பேசினாலும் போதாது. 'மனிதர்களின் உறுதிப்பாடு' என்ற சூரியன், நிலவிலும் உதயமாகும் என்பதை சந்திரயான்-3 உணர்த்தியுள்ளது. அத்திட்டத்தால் மக்களின் கனவுகளும் தற்போது உயர்ந்துள்ளன.

விஞ்ஞானிகளுடன் இணைந்து பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் சந்திரயான்-3 திட்டத்தின் வெற்றிக்குப் பங்களித்துள்ளனர். அனைவரது முயற்சியும் ஒருங்கிணையும்போது வெற்றி வசப்படும். அதுதான் சந்திரயான்-3 திட்டத்தின் மிகப் பெரிய சாதனை. இத்தகைய ஒருங்கிணைந்த வெற்றியை எதிர்காலத்திலும் பல்வேறு விண்வெளி சார்ந்த திட்டங்களில் இந்தியா படைக்கும்.

**புதிய முன்னெடுப்புகள்:** ஜி20 கூட்டமைப்புக்கு இந்தியா தலைமையேற்று வருகிறது. அது 'மக்களின் தலைமைத்துவமாக' மாறியுள்ளது. ஜி20 கூட்டமைப்பை அனைவரையும் உள்ளடக்கியதாக இந்தியா மாற்றியுள்ளது. இந்தியாவின் அழைப்பை ஏற்று ஜி20 கூட்டமைப்பில் ஆப்பிரிக்க ஒன்றியம் இணைந்துள்ளது. இது ஆப்பிரிக்க மக்களின் குரல் சர்வதேச அரங்கில் எதிரொலிக்க வழிவகுக்கும்.

கடந்த ஆண்டு ஜி20 தலைமைப் பொறுப்பை ஏற்றதில் இருந்து பல்வேறு முன்னெடுப்புகளை இந்தியா புகுத்தியது. தில்லியில் மட்டும் ஜி20 தொடர்பான கூட்டங்களை நடத்தாமல், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் அக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. சுமார் 200 கூட்டங்கள் 60-க்கும் மேற்பட்ட நகரங்களில் நடத்தப்பட்டன. ஜி20 நாடுகளின் பிரதிநிதிகள் எப்பகுதிக்குச் சென்றாலும், அங்கு மக்களால் சிறப்புடன் வரவேற்கப்பட்டனர்.

**உலக சாதனை:** நாட்டின் பன்முகத்தன்மையையும் துடிப்பான ஜனநாயகத்தையும் கண்டு ஜி20 பிரதிநிதிகள் வியந்தனர். இந்தியாவில் பல்வேறு வாய்ப்புகள் காணப்படுவதையும் அவர்கள் உணர்ந்தனர்.

ஜி20 சார்ந்த நிகழ்ச்சிகளில் மக்களின் பங்களிப்பும் அதிகமாக இருந்தது. வாரணாசியில் நடைபெற்ற ஜி20 வினாடி- வினா போட்டியில் 800 பள்ளிகளைச் சேர்ந்த 1.25 லட்சம் மாணவர்கள் பங்கேற்றனர். இது புது உலக சாதனையாக அமைந்தது.


குஜராத்தின் சூரத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 15 மாநிலங்களைச் சேர்ந்த 15,000 பெண்கள் 'புடவை பேரணி'யில் கலந்துகொண்டனர். இது சூரத்தின் ஜவுளி உற்பத்தித் துறைக்கு ஊக்கமளித்ததோடு மட்டுமல்லாமல், உள்ளூர் உற்பத்திப் பொருள்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்தியது. ஸ்ரீநகரில் நடைபெற்ற ஜி20 கூட்டத்துக்குப் பிறகு, அங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

**விளையாட்டுக்கு ஊக்கம்:** விளையாட்டுத் துறையில் இந்தியா சர்வதேச அரங்கில் ஜொலிக்க வேண்டும். அதற்கான ஊக்கத்தை அரசு தொடர்ந்து வழங்கி வருகிறது. முக்கியமாக, ஹாக்கி, கால்பந்து, கபடி, கோ-கோ ஆகிய விளையாட்டுகள் இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால், அவற்றில் நாடு சிறந்து விளங்க வேண்டும்.

சீனாவில் அண்மையில் நடைபெற்ற உலக பல்கலைக்கழக விளையாட்டுப் போட்டியில் இந்தியா 26 பதக்கங்களை வென்றது. கடந்த 1959-ஆம் ஆண்டில் இருந்தே இந்தப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பாண்டுக்கு முன்பு வரை மொத்தமாகவே இந்தியா 18 பதக்கங்களை மட்டுமே கைப்பற்றியிருந்தது. நடப்பாண்டில் பங்கேற்ற வீரர்களின் சாதனை மகத்தானது.

எந்த விளையாட்டில் பங்கேற்றாலும் இந்தியர்கள் அதில் சாதித்து வருகின்றனர். அதன் காரணமாக விளையாட்டுகளின் மீதான மக்களின் பார்வை மாறியுள்ளது. முன்பெல்லாமல் மாணவர்களின் படிப்புக்கே பெற்றோர் அதிக முக்கியத்துவம் அளித்து வந்தனர். தற்போது விளையாட்டுகளுக்கும் சம முக்கியத்துவத்தை அவர்கள் அளித்து வருகின்றனர் என்றார் பிரதமர் மோடி.

**பிரதமர் நரேந்திர மோடி**






**ஜி20 மாநாட்டை நடத்த முழுமையான தயார் நிலை**

"ஜி20 கூட்டமைப்பு நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் மாநாடு தில்லியில் செப்.9,10-இல் நடைபெறவுள்ளது. மாநாட்டை நடத்துவதற்கு இந்தியா முழுமையான தயார் நிலையில் உள்ளது.

இந்த மாநாட்டில் பங்கேற்பதற்காக 40-க்கும் அதிகமான நாடுகளின் தலைவர்கள், பன்னாட்டு அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் தில்லிக்கு வருகை தரவுள்ளனர். ஜி20 கூட்டமைப்பின் வரலாற்றிலேயே இது மிகப் பெரிய மாநாடாகத் திகழும்.

இந்த மாநாட்டை வெற்றி பெறச் செய்வதற்கு மக்கள் அனைவரும் முன்வர வேண்டும்" என்றார் பிரதமர் மோடி.

# வரலாறு படைத்தார் நீரஜ் சோப்ரா

## உலக தடகள சாம்பியன்ஷிப்பில் தங்கம்



**புடாபெஸ்ட், ஆக.27:** உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டி ஈட்டி எறிதலில் தங்கம் வென்றார் ஒலிம்பிக் சாம்பியன் நீரஜ் சோப்ரா.

ஹங்கேரியின் புடாபெஸ்ட் நகரில் உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஈட்டி எறிதல் இறுதிச் சுற்று ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றது.

இதில் இந்தியாவின் நட்சத்திர வீரரும், ஒலிம்பிக் சாம்பியனுமான நீரஜ் சோப்ரா 88.17 மீ. தொலைவுக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

**பாக். வீரருக்கு வெள்ளி:** பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீம் 87.82 மீ. தொலைவுக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். செக். குடியரசு வீரர் ஜேக்கப் வேட்லெச் 86.67 மீ. தொலைவுக்கு எறிந்து வெண்கலம் வென்றார்.

ஏனைய இந்திய வீரர்கள் கிஷோன் ஜீனா 5-ஆவது இடத்தையும், டிபி. மானு 6-ஆவது இடத்தையும் பெற்றனர்.

**தங்கம் வென்ற முதல் இந்தியர்:** உலக தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் ஏற்கெனவே நீளம் தாண்டுதலில் அஞ்சு பாபி ஜார்ஜ் வெண்கலம் வென்றிருந்தார்.

இந்நிலையில் தற்போது ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீரர் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளார் நீரஜ் சோப்ரா.

மேலும் கடந்த 2021 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலும் தங்கம் வென்றிருந்தார். இதன் மூலம் ஒலிம்பிக், உலக சாம்பியன் என இரட்டைப் பட்டங்களை வென்றவர் என்ற சிறப்பையும் நீரஜ் சோப்ரா பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒலிம்பிக், ஆசியப் போட்டி, காமன்வெல்த், யு-20 உலக சாம்பியன்ஷிப், டயமண்ட் லீக் தடகளப் போட்டிகளிலும் தங்கம் வென்றவர் என்ற பெருமையும் நீரஜ் வசம் உள்ளது.

இதன் மூலம் நடப்பு உலக மற்றும் ஒலிம்பிக் சாம்பியன் பட்டங்கள் நீரஜ் வசமே உள்ளது குறிப்பிடத்தக்கது.

# நிலவின் தென்துருவ அதிகபட்ச வெப்பம் 70 டிகிரி செல்சியஸ்

## 'விக்ரம்' லேண்டரின் முதல்கட்ட ஆய்வில் தகவல்

**பெங்களூரு, ஆக. 27:** நிலவின் தென் துருவ மேற்பரப்பின் வெப்பநிலை அதிகபட்சமாக 70 டிகிரி செல்சியஸ் வரை உள்ளதாக 'விக்ரம்' லேண்டரின் முதல்கட்ட ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

'சந்திரயான்-3' விண்கலத்தின் மூலமாக இஸ்ரோ செலுத்திய 'விக்ரம்' லேண்டர் கடந்த 23-ஆம் தேதி நிலவின் தென் துருவப் பகுதியில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. அதையடுத்து, அதில் உள்ள அறிவியல் கருவிகளைக் கொண்டு ஆய்வுப் பணிகளை லேண்டர் தொடங்கியது.

நிலவின் மேற்பரப்பு மற்றும் அடிப்பரப்பு வெப்பநிலைகளை அளவிடுவதற்கான கருவி லேண்டரில் பொருத்தப்பட்டிருந்தது. நிலவின் மேற்பரப்பிலும், நிலத்துக்கு அடியே 10 சென்டிமீட்டர் வரையிலும் நிலவும் வெப்பநிலையை அக்கருவி ஆய்வு செய்தது.



அதன்படி, நிலவின் மேற்பரப்பு வெப்பநிலை அதிகபட்சமாக 70 டிகிரி செல்சியஸாக பதிவாகியுள்ளது. அதே வேளையில், தரைப் பகுதிக்கு அடியே 8 செ.மீ. ஆழத்தில் வெப்பநிலையானது மைனஸ் 10 டிகிரி செல்சியஸாக பதிவாகியுள்ளது. 4 செ.மீ. ஆழத்தில் வெப்பநிலை 30 டிகிரி செல்சியஸாகவும், 2 செ.மீ. ஆழத்தில் 40 டிகிரி செல்சியஸாகவும் உள்ளது.

இது தொடர்பாக, இஸ்ரோ விஞ்ஞானி பி.ஹெச். எம். தாருகேஷா பிடிஐ செய்தியாளரிடம் கூறுகையில், 'நிலவின் தென் துருவத்தில் மேற்பரப்பு வெப்பநிலை அதிகபட்சமாக 20 முதல் 30 டிகிரி செல்சியஸ் வரை மட்டுமே இருக்கும் என நினைத்தோம். ஆனால், அது 70 டிகிரி செல்சியஸாக உள்ளது வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

பூமியின் மேற்பரப்புக்கும் அடிப்பகுதிக்கும் இடையிலான வெப்பநிலை வேறுபாடு 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை மட்டுமே இருக்கும். ஆனால், நிலவின் தென் துருவத்தில் இந்த வேறுபாடு சுமார் 50 டிகிரி செல்சியஸ் வரை உள்ளது. இந்தத் தரவுகள் நிலவு தொடர்பான கூடுதல் ஆய்வுக்குப் பெருந்துணையாக இருக்கும்' என்றார்.

# வீடு கட்ட தோண்டிய பள்ளத்தில் சோழர் கால சிலைகள்!





கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே கண்டறியப்பட்ட பஞ்சலோக சிலைகள்.

**சிதம்பரம், ஆக. 27:** கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே வீடு கட்ட பள்ளம் தோண்டியபோது 9 சுவாமி சிலைகள் கண்டறியப்பட்டன. இவை சோழர் காலத்தைச் சேர்ந்த பஞ்சலோக சிலைகள் எனக் கூறப்படுகிறது.

காட்டுமன்னார்கோவில் அருகே உள்ள திருநாரையூர் கிராமத்தில் வசிப்பவர் உத்திராபதி. அதே பகுதியில் இவருக்குச் சொந்தமான இடத்தில் புதிய வீடு கட்டுவதற்கு சனிக்கிழமை அஸ்திவாரம் தோண்டியபோது திடீரென உலோகத்தின் மீது மண்வெட்டி விழும் சப்தம் கேட்டது. இந்தப் பணியில் ஈடுபட்ட தொழிலாளிகளில் ஒருவரான வள்ளல் இதுகுறித்து உத்திராபதிக்கு தகவல் தெரிவித்தார்.

அவர் அங்குவந்து பள்ளம் தோண்டும் பணியை நிறுத்துமாறு கூறினாராம். பின்னர், தொழிலாளர்கள் அனைவரையும் அனுப்பி விட்டார்.

இதையடுத்து, உத்திராபதி தனது குடும்பத்தினருடன் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையில் அதே பகுதியில் பள்ளம் தோண்டியபோது 6 சுவாமி சிலைகள் கிடைத்தன.

அவற்றை தனது பழைய வீட்டில் உத்திராபதி மறைத்து வைத்தார். ஞாயிற்றுக்கிழமை காலை மீண்டும் பணிக்கு வந்த தொழிலாளி வள்ளல், குறிப்பிட்ட இடம் ஆழமாக தோண்டப்பட்டு இருந்ததைப் பார்த்து சந்தேகமடைந்து, கிராம உதவியாளருக்குத் தகவல் தெரிவித்தார்.

வட்டாட்சியர் தமிழ்ச்செல்வன், வருவாய் ஆய்வாளர் சீனுவாசன், கிராம நிர்வாக அலுவலர் ரவி ஆகியோர் உத்திராபதியின் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது, அங்கு 6 சுவாமி சிலைகள் இருந்தன.

குமராட்சி காவல் நிலைய ஆய்வாளர் அமுதா தலைமையிலான போலீஸார் அங்கிருந்த சிவன், பார்வதி, ஆடிப்பூர அம்மன், போக சக்தி அம்மன், பஞ்சமூர்த்தி அம்பாள், இடம்புரி விநாயகர் ஆகிய சிலைகளை மீட்டனர்.

கடலூர் மாவட்ட எஸ்.பி. ராஜாராமன், சிதம்பரம் ஏ.எஸ்.பி. ரகுபதி, டி.எஸ்.பி. ரூபன்குமார், இந்து சமய அறநிலையத் துறை செயல் அலுவலர் வேல்விழி மற்றும் அதிகாரிகள் அங்கு வந்து ஆய்வு செய்தனர். சிலைகள் கிடைத்த இடத்தை மேலும் ஆழமாகத் தோண்ட முடிவு செய்யப்பட்டது. இதையடுத்து, பொக்லைன் இயந்திரம் மூலம் பள்ளம் தோண்டும் பணி மீண்டும் நடைபெற்றது. அப்போது நடராஜர், திரிபுராந்தகர், சம்பந்தர் ஆகிய மேலும் 3 சிலைகள் கண்டறியப்பட்டன.

இதுகுறித்து மாவட்ட எஸ்.பி. ராஜாராம் கூறியதாவது:

திருநாரையூரில் உத்திராபதி - அஞ்சலை ஆகியோருக்குச் சொந்தமான இடத்திலிருந்து மொத்தம் 9 சிலைகள் கண்டறியப்பட்டன.

இவை சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பஞ்சலோக சிலைகள். இவை அனைத்தும் குமராட்சி காவல் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு வழக்குப் பதிவு செய்யப்படும். அதன்பிறகு, வட்டாட்சியரிடம் சிலைகள் ஒப்படைக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்படும். மீட்கப்பட்ட சிலைகள் எந்தக் கோயிலுக்குச் சொந்தமானவை என இந்து சமய அறநிலையத் துறை, தொல்லியல் துறையினரின் உதவியுடன் ஆய்வுசெய்யப்படும். ஆய்வு முடிவின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட கோயிலில் சிலைகள் ஒப்படைக்கப்படும் என்றார்.

இதுகுறித்து தொல்லியல் துறை பேராசிரியர் ஜெ.ஆர்.சிவராமகிருஷ்ணன் கூறியதாவது:

மீட்கப்பட்ட சிலைகள் 10 மற்றும் 11-ஆம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட்ட சோழர் காலத்தைச் சேர்ந்தவை. மாலிக் கபூரின் படைகள் மதுரையிலிருந்து வீரபாண்டியனை விரட்டி வந்தபோது, சிதம்பரம் அருகே உள்ள தேவிகோட்டை வனப் பகுதியில் வீரபாண்டியன் பதுங்கினார். அவரைப் பிடிக்க தஞ்சாவூர், காட்டுமன்னார்கோவில் வழியாக வந்த மாலிக் கபூர் சிதம்பரம் நடராஜர் கோயிலை கொள்ளையடித்தார்.

அவரது படைகள் காட்டுமன்னார்கோவில், கங்கைகொண்ட சோழபுரம்வழியாகச் சென்றபோது கோயில்களும், மக்களின் சொத்துகளும் கொள்ளையடிக்கப்பட்டன. அப்போது, பாதுகாப்பு கருதி மண்ணுக்குள் புதைத்து வைக்கப்பட்ட கோயில் சிலைகள் தற்போது கண்டறியப்பட்டுள்ளன என்றார்.

# செயற்கை நுண்ணறிவு பயன்பாட்டில் நெறிமுறை அவசியம்

## பி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி வலியுறுத்தல்

**புது தில்லி, ஆக. 27:** 'செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் நெறிமுறை அவசியம்; இதற்கான கட்டமைப்பை உருவாக்க ஒட்டுமொத்த உலகமும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும்' என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார்.

தில்லியில் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த பி20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி இக்கருத்தை தெரிவித்தார்.

ஜி20 கூட்டமைப்பின் அதிகாரபூர்வ வணிக ஆலோசனை அமைப்பு பி20 (பிசினஸ்20) ஆகும். இந்தியாவின் தலைமையில் ஜி20 உச்சி மாநாடு, தில்லியில் அடுத்த மாதம் 9,10 ஆகிய தேதிகளில் நடைபெறவுள்ளது.

இதையொட்டி, இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில் தில்லியில் பி20 உச்சிமாநாடு கடந்த 25-ஆம் தேதி தொடங்கி மூன்று நாள்கள் நடைபெற்றன. இறுதி நாளான ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடி பங்கேற்று, தொழில்துறை தலைவர்கள் மத்தியில் பேசியதாவது:

பருவநிலை மாறுபாடு, எரிசக்தித் துறை பிரச்னை, உணவு விநியோகச் சங்கிலி சமநிலையின்மை, நீர் பாதுகாப்பு உள்ளிட்ட சவால்கள் வர்த்தகத்தின் மீது பெரும் தாக்கத்தை விளைவிக்கின்றன. இந்த சவால்களுக்கு தீர்வுகாண பொது முயற்சிகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

இப்போது கிரிப்டோகரன்சி குறித்த சவாலும் நிலவுகிறது. இந்த விவகாரத்தில் மேன்மேலும் ஒருங்கிணைந்த அணுகுமுறை அவசியம். இதற்காக உலகளாவிய செயல்திட்டம் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான், அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் பாதுகாக்க முடியும்.

**செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்:** இன்றைய உலகமானது, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை நோக்கி பெரும் உத்வேகம் காட்டி வருகிறது. அதேநேரம், இத்தொழில்நுட்பத்தின் நெறிமுறை சார்ந்த சில கருத்துகளும் நிலவுகின்றன. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாட்டில் நெறிமுறை அவசியமாகும். இதை உறுதி செய்ய, தொழில்துறையினரும் அரசுகளும் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும். உலகளாவிய கட்டமைப்பின்கீழ் இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும்.



தில்லியில் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த பி20 மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி.

**உலகின் எதிர்காலம்:** வர்த்தகத்துக்கான பசுமைசார் கடன் கட்டமைப்பை இந்தியா உருவாக்கி வருகிறது. சர்வதேச தொழில் தலைவர்களும் கைகோப்பதன் மூலம் இதை உலகளாவிய இயக்கமாக மாற்ற வேண்டும்.

வர்த்தகத்தில் பாரம்பரிய அணுகுமுறையை மறுபரிசீலனை செய்து, நுகர்வோரை மையப்படுத்திய அணுகுமுறைக்கு மாற வேண்டும். உற்பத்தியாளர், நுகர்வோர் இடையே சமநிலை பராமரிக்கப்படும்போதுதான், லாபகரமான சந்தை நிலைத்திருக்கும். உலகளாவிய வளர்ச்சியின் எதிர்காலம், தொழில் துறையின் எதிர்காலத்தைப் பொருத்தே உள்ளது.

**அறிவியல், தொழில் துறையின் வெற்றி:** சந்திரயான்-3 வெற்றியை இந்தியாவுடன் சேர்ந்து, ஒட்டுமொத்த உலகமும் கொண்டாடுகிறது. இது, அறிவியல் மற்றும் தொழில்துறையின் வெற்றியாகும்.

நூற்றாண்டுக்கு ஒரு முறையாக ஏற்பட்ட கரோனா பெருந்தொற்று, நமக்கு பல படிப்பினைகளைக் கற்றுத் தந்தது. 'பரஸ்பர நம்பிக்கையில் அதிக முதலீடு செய்ய வேண்டுமென்ற பாடத்தை நமக்கு உணர்த்தியது.

**வறுமையில் இருந்து மீட்பு:** இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளாக அமல்படுத்தப்பட்ட கொள்கைகளால், வெறும் 5 ஆண்டுகளில் 13.5 கோடி மக்கள் வறுமையில் இருந்து மீண்டனர். இவர்கள்தான் புதிய நுகர்வோர். இந்தப் புதிய நடுத்தர வர்க்கமும் இந்தியாவின் வளர்ச்சிக்கு வேகம் கொடுக்கிறது.

இந்தியாவுடனான உங்கள் (உலகளாவிய தொழில்துறை தலைவர்கள்) நட்பு எவ்வளவு ஆழமடைகிறதோ, அந்த அளவுக்கு இரு தரப்புக்கும் அதிக வளம் கிடைக்கும்.

**நுகர்வோர் நலன் பராமரிப்பு தினம்:** நுகர்வோர் உரிமைகளைப் பற்றி பேசும் நாம், நுகர்வோர் நலன் பராமரிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச நுகர்வோர் நலன் பராமரிப்பு தினத்தை ஏற்படுத்துவது குறித்து நாம் நிச்சயமாக சிந்திக்க வேண்டும்.

இது வர்த்தக நிறுவனங்கள் மற்றும் நுகர்வோர் இடையிலான நம்பிக்கையை வலுப்படுத்த உதவும் என்றார் பிரதமர் மோடி.

இந்த மாநாட்டில் 55 நாடுகளைச் சேர்ந்த 1,500-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர். 54 பரிந்துரைகள், 172 கொள்கை செயல்திட்டங்களுடன் கூடிய பி20 அறிக்கை குறித்து மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த அறிக்கை ஜி20 மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

EVA STALIN IAS

# ஒவ்வொரு நாளும் துயரம்!



உதயை மு. வீரையன்

**தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை நாட்டினரின் தாக்குதல்கள் அதிகரித்து வருகின்றன. இத்தகைய தாக்குதல் சம்பவங்கள் மீனவர்களிடையே மிகுந்த மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளன. தொடர்ச்சியான வன்முறைச் செயல்கள் அவர்களின் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கியுள்ளன.**

# சூழல் காத்தல் தேசம் காத்தல்

**ரெ. சுப்பா ராஜு**

நமது சுற்றுச்சூழல் நாளுக்குநாள் மோசமடைந்து வருகின்றது. நிலம், நீர், காற்று என அனைத்தும் மாசடைந்து வருகின்றன. சுற்றுச்சூழலை மாசுபடுத்துவதில் மனிதனின் நடவடிக்கைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. நாம் மட்டுமல்ல, நம் சந்ததியினரும் ஆரோக்கியமாக வாழ்வதற்கு மிகவும் முக்கியமானது நம் சுற்றுச்சூழலாகும். அதனைக் காப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

சூரியனிடமிருந்து தேவையான ஆற்றலை பூமி பெறுகிறது. கார்பன் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஸ் ஆக்சைடு போன்ற வாயுக்கள் வாயு மண்டலத்தில் பரவி உள்ளன. இந்த வாயுக்கள் பசுமை இல்ல வாயுக்கள் என்று அழைக்கப்படுகின்றது. இதில் வெளிப்படும் வாயுக்களை பூமி பாதி அளவு எடுத்து க் கொள்ளும்.

தற்போது மாறிவரும் பருவநிலையால் மழை சரியாகப் பொழிவதில்லை. அதாவது, அதிகமாகவோ குறைவாகவோ பொழிகிறது. அண்டார்டிகாவில் பனி உருகிவருகிறது. இயற்கை சீற்றங்களும் ஏற்பட காரணமாகிறது. ஓசோன் படலம் விரிசல் அடைவதற்கும் முக்கியக் காரணம் காற்றில் வெளிப்படும் குளோரோ புளோரோ கார்பன், மீத்தேன் ஆகும்.

அறிவியல் வளர்ச்சி முன்னேற்றம் அடைந்திருந்தாலும் அதை பயன்படுத்தும் நாம் சுற்றுச்சூழல் மாசடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். 'சுற்றுச்சூழல் அமைப்பின் மறுசீரமைப்பு' என்ற கோட்பாட்டை ஐ.நா. சபை அண்மையில் அறிவித்துள்ளது.

மறு சீரமைப்பு என்பது சுற்றுச்சூழல் மோசமடைவதை தடுப்பது என்பதாகும். சமீப காலமாக பிரேஸில், அமெரிக்கா, ஆஸ்திரேலியா உள்பட பல நாடுகளை புரட்டிபோட்ட காட்டு தீ , ஆப்பிரிக்காவை அச்சுறுத்திய வெட்டுக்கிளி தாக்குதல் மற்றும் உலகையே உலுக்கிய கொவைட் 19 என பல அபாயங்களை சந்தித்து வருகிறோம்.

புவி வெப்பமயமாதலும் உலகை அச்சுறுத்தி வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் சுற்றுச்சூழல் தினத்தைக் கொண்டாடினால் மட்டும் போதாது. உலகில் உள்ள மரங்களில் முக்கால் பங்கு மரங்கள் உயிரினங்களின் இருப்பிடமாகும். கரிமில வாயு வை உள்வாங்கி, நமக்கு உணவு, எரிபொருள், மருந்து எல்லாவற்றையும் அளித்து வருபவை காடுகள்தான்.

அரசு சுற்றுச்சூழல் நலனைக் கருத்தில் கொண்டு சுற்றுலாத் தலங்களை காடுகளில் அமைப்பதை தவிர்க்க வேண்டும். மனிதர்களைத் தவிர வேறு எந்த உயிரினத்தாலும் பூமிப்பந்திற்கு பாதிப்பு இல்லை. சூழல் காக்க உலகில் உள்ள ஒவ்வொரு மனிதனும் முன் வர வேண்டும்.

இன்றைய மனிதர்கள் அனைத்தையும் விலைபொருளாக பார்க்கின்றனர். விரைவில் சுவாசிக்கும் காற்று விற்பனைக்கு வரலாம். இப்போதே பெருநகரங்களில் ஆக்சிஜன் பார்கள் வந்துவிட்டனவாம். வாகனப் பயன்பாட்டைக் குறைத்தால் சுற்றுச்சூழல் மேம்படும். புகை கக்கும் வாகனங்களுக்கு பதிலாக மிதிவண்டியை கூடுமானவரை பயன்படுத்தலாம். இதனால் சூழல் காக்கப்படுவதுடன் உடலும் ஆரோக்கியமாக இருக்கும்.

செய்தித்தாள் ஒன்றை ஒன்பது முறை மறுசுழற்சி செய்ய முடியும் என்று சொல்கிறார்கள். எனவே செய்தித்தாள்களை மறுசுழற்சி செய்வது மூலம் மரங்கள் வெட்டப்படுவதை தவிர்க்கலாம் என்று சொல்லப்படுகிறது. அனைத்துத் துறையிலும் மறுசுழற்சி மறுபயன்பாடு என்ற வழக்கத்தை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நாம் குறைந்தபட்சம் புகை வாகனங்களைத் தவிர்க்க வேண்டும். ஒவ்வொருவரும் பிறந்த நாளுக்கு ஒரு மரம் நட வேண்டும். நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டை படிப்படியாகக் குறைத்து தவிர்க்க வேண்டும். மின்னணுக் கழிவுகளைகளையும் நெகிழி கழிவுகளையும் மண்ணில் வீசி விடாமல் முறையாக அப்புறப்படுத்த வேண்டும்.

கடலில் கழிவுப் பொருட்களைக் கொட்டுதல் கூடாது. இதனால் கடல்வாழ் உயிரினங்கள் பெருமளவு பாதிக்கப்படுகின்றன. காடுகளிலும் நெகிழிப் பொருட்களையும் கண்ணாடித் துண்டுகளையும் போடுதல் கூடாது. இதனால் விலங்குகளுக்குப் பெரும் கெடுதல் ஏற்படுகிறது. மேலும், காட்டுத்தீ ஏற்படவும் வாய்ப்பு உள்ளது.

பொருட்களை வாங்க கடைக்கு செல்லும் பொழுது துணிப்பைகளைக் கொண்டு செல்ல வேண்டும். உணவுகளை எடுத்துச் செல்லும்போது பாத்திரங்களை பயன்படுத்துங்கள். நீர் குப்பிகளைத் தவிர்த்து விடுங்கள். உலோக நீர் பாட்டில் எடுத்துச் செல்லுங்கள். ஒரு நுகர்வோராக உங்கள் பொறுப்பை உணர்ந்து செயல்படுவதன் மூலம் நீங்கள் மகத்தான மாற்றத்தை உண்டாக்க முடியும்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்பது போல் நமது சுற்றுச்சூழலைக் காப்பதும் மாசுபடுத்துவதும் நாம்தானே! நெகிழி பைகளைத் தவிர்ப்பதன் மூலம் நெகிழிக் கழிவு உற்பத்தியாகும் தொடர் சங்கிலி துண்டிக்கப்படுகிறது.

ரசாயன விவசாயத்தில் மண் வளம் பாதிக்கப்படுவதுடன் சுற்றுச்சூழலும் மனித ஆரோக்கியமும் பாதிக்கப்படுகிறது. மரங்களின் வெளிமூச்சு மனிதனின் உயிர் மூச்சாகிறது என்பதை நாம் உணர வேண்டும். இறந்தவர்களைப் புதைக்கின்ற இடங்களில் ஒரு மரம் நட்டால் சில மாதங்களில் அங்கு மரச்சோலை உருவாகும் .

மாண்டவரே மரமாக ஓங்கி வளர்ந்துஉயிருடன் வளர்கிறார் என்ற உணர்வுபூர்வமான திருப்தி கிடைக்கும். வேளாண் காடுகளையும் நாம் அதிகமாக வளர்க்க வேண்டும். சுற்றுச்சூழல் பாதிப்பிற்கான தீர்வை பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு எடுத்துக் கூறுதல் வேண்டும.

மலைப்பகுதிகளையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். எவரெஸ்ட் போன்ற மலை சிகரங்களில் ஏறுபவர்கள் கூட தாங்கள் பயன்படுத்திய பொருட்களை அங்கு வீச அனுமதி இல்லை. தாங்களே கீழே உள்ள முகாமுக்கு வரும்பொழுது அவற்றைக் கொண்டு வர வேண்டும் என்பதே விதி ஆகும். எனவே, சூழல் காப்போம்; தேசம் காப்போம்.

EVA STALIN IAS

# பொலிவுறு நகரங்கள் திட்டம்: தமிழக 3 மாநகராட்சிகளின் பணிகளுக்கு விருது

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, ஆக.27:** பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் இந்திய அளவில் சிறந்த மாநிலத்துக்கான விருதில், தமிழகம் 2- ஆம் இடத்தை பெற்றது மட்டுமல்லாமல் மாநிலத்தின் 3 மாநகராட்சிகளின் சிறப்பு பணிகளுக்கும் மத்திய அரசு விருது அறிவித்துள்ளது.

இந்திய பொலிவுறு நகரங்களுக்கான விருதுகள் (ஐஎஸ்ஏசி) மத்திய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் பொலிவுறு நகரங்கள் பணியின் (மிஷன்) கீழ் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வழங்கப்படுகின்றன. இதில் கடந்த 2022-ஆம் ஆண்டுக்கான விருதுகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

2022 -ஆம் ஆண்டுக்கான பொலிவுறு நகரங்கள் விருது போட்டியில் சிறந்த மாநிலங்களுக்கான தேசிய விருதுகள் பட்டியலில் மத்திய பிரதேசம் முதலிடத்தையும், தமிழகம் 2-ஆவது இடத்தையும் பெற்றன. மேலும், தமிழகத்தைச் சேர்ந்த மூன்று மாநகராட்சிகளுக்கும் இந்த விருதுகள் கிடைத்துள்ளன. அதன் விவரம் வருமாறு:

**கோவைக்கு 2 விருதுகள்:** கோவை மாநகராட்சிக்கு சிறந்த கட்டுமான சூழலுக்கும், சிறந்த தென் மண்டல பொலிவுறு நகரம் என இரு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. கோவையில் உள்ள சாலைகள், முன் மாதிரி சாலைகளாக இருப்பதும், இங்குள்ள ஏரிகள் புனரமைத்து புத்துயிரூட்டப்பட்டதற்கு சிறந்த கட்டுமான சூழலுக்கான விருதும் அறிவிக்கப்பட்டுள்ளது.


தூத்துக்குடி மாநகராட்சிப் பள்ளியில் கையடக்க கணினியுடன் மாணவர்கள்.

பொலிவுறு நகரங்கள் 5 மண்டலமாக பிரிக்கப்பட்டு, தென் மண்டலத்தில் சிறந்த பொலிவுறு நகரமாக கோவை தேர்வு செய்யப்பட்டுள்ளது. கோவையில் உள்ள கிருஷ்ணாம்பதி ஏரி, செல்வாம்பதி ஏரி, குமாரசாமி ஏரி, செல்வசிந்தாமணி குளம், பெரியகுளம், வாலாங்குளம், குறிச்சி உள்ளிட்ட 8 ஏரிகள் புத்துயிரூட்டப்பட்டுள்ளன.

இந்த ஏரிகளில், அதன் உயிரியல் பன்முகத்தன்மை பாதுகாக்கப்பட்டு, தாவரவியல் பூங்கா, சைக்கிள் வழித்தடம், பாதுகாக்கப்பட்ட வழித்தடம், சூரிய சக்தி தொழில்நுட்பத்துடன் சென்சார் மூலம் தெரு விளக்கு போன்ற ஒருங்கிணைந்த திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சில ஏரிகளில் இருந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு, பறவைகள் கூடுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளன.

உயர்நிலை மேம்பாலத்துடன் கூடியதாக இருக்கும் வாலாங்குளம் ஏரி ஆகியவை தேர்வுக் குழுவால் ஆய்வு செய்யப்பட்டது. இந்த எட்டு ஏரிகள் முழுவதும் சுற்றுச்சூழல் அமைப்புக்கு இணங்க மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், பூங்கா, வசதியான பொது


புனரமைக்கப்பட்ட கோவை உக்கடம் பெரியகுளம் கரையில் உள்ள சைக்கிள் வழித்தடம்.

இடத்துடன் புத்துயிர் பெற்றிருப்பதாகக் கூறி கோவைக்கு விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

**தஞ்சை அய்யன் குளம்:** தஞ்சாவூர் மேலவீதியில் மன்னர் காலத்தில் கட்டப்பட்ட அய்யன் குளம் பராமரிப்பின்றி வறண்டு போனது. அங்குள்ள சிவகங்கை பூங்காவிலிருந்து வரும் தண்ணீர் ஆக்கிரமிப்பால் தடைப்பட்டது. தற்போது பொலிவுறு நகரங்களுக்கான திட்டத்தில் தஞ்சை மாநகராட்சி ரூ.5.1 கோடி செலவிட்டு இந்தக் குளத்திற்கு தண்ணீர் கொண்டுவரப்பட்டு சீரமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குளம் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக மாற்றப்பட்டுள்ளது. 64 ஆயக் கலைகள், 5 வகை நிலங்கள், நவரத்தினங்கள், 16 செல்வங்கள் போன்றவற்றை ஓவியமாக வரைந்து நடைபாதை மின்விளக்கு வசதிகளுடன் இந்த குளம் பிரமிக்க வைக்கிறது. இதை யடுத்து, பொலிவுறு நகர திட்டத்தின் கீழ் தஞ்சை மாநகராட்சிக்கு கலாசாரத்துக்கான விருது கிடைத்துள்ளது.

**பொலிவுறு பள்ளி (ஸ்மார்ட் பள்ளி):** தூத்துக்குடி, சாமுவேல்புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியை பொலிவுறு பள்ளியாக மாற்றியமைத்ததற்காக தூத்துக்குடி மாநகராட்சிக்கு சமூக அம்சத்துக்கான விருது அறிவிக்கப்பட்டுள்ளது. 12 - ஆம் வகுப்பு வரை உள்ள இந்தப் பள்ளியில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் கற்பித்தல் நடைபெறுகிறது. இந்த மாநகராட்சிப் பள்ளியில் பெருநிறுவன சமூக பங்களிப்பு நிதி மூலம் 37 வகுப்பறைகள் உரிய மேஜை நாற்காலி, மின் விசிறி ஆகியவற்றுடன் கட்டமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 3 நூலகங்கள், 3 அரங்கங்கள், 6 ஆய்வுக்கூடங்கள் என கல்வி அகாதெமிக்கு தேவையான வசதிகளோடு, 6 டைனிங் ஹால் (உணவு அருந்துமிடம்), 17 கழிப்பறைகள் போன்ற வசதிகளோடு மாணவர்களுக்கு 1,000 கையடக்கக் கணினியும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் சிறந்த கற்றல் வசதி உருவாக்கப்பட்டுள்ள இந்த மாநகராட்சி பள்ளி, 2022 -ஆம் ஆண்டுக்கான இந்திய பொலிவுறு நகர திட்ட விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த விருதுகள் வரும் செப்டம்பர் 27-ஆம் தேதி குடியரசுத் தலைவரால் வழங்கப்படவுள்ளன.

## ரூ.1.10 லட்சம் கோடியில் 6,041 பணிகள் நிறைவு

பொலிவுறு நகரங்கள் பணி கடந்த 2015-ஆம் ஆண்டு ஜூனில் தொடங்கப்பட்டது. 'ஸ்மார்ட் தீர்வுகள்' பயன்பாட்டின் மூலம் பொதுமக்களுக்கு உரிய உள்கட்டமைப்பு வசதி, தூய்மையான மற்றும் நிலையான சூழல், கண்ணியமான வாழ்க்கைத் தரம் போன்றவற்றை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது.

இந்த மிஷன் மூலம் முன்மொழியப்பட்ட மொத்த பணிகளில் ரூ. 1,10,635 கோடி மதிப்புள்ள 6,041 பணிகள் (தேர்வு செய்யப்பட்ட) 100 பொலிவுறு நகரங்களில் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள ரூ.60,095 கோடி மதிப்பிலான 1,894 திட்டங்கள் 2024-ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் முடிக்கப்படத் திட்டமிடப்பட்டுள்ளன.

100 பொலிவுறு நகரங்களில் மேற்கொள்ளப்படும் பணிகள் ஒரு கட்டுப்பாட்டு மையத்தில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# எகிப்தில் 'பிரைட் ஸ்டார்' போர்ப் பயிற்சி தொடக்கம்

**புது தில்லி, ஆக. 27:** பல்வேறு நாடுகள் பங்கேற்கும் 'பிரைட் ஸ்டார்' போர்ப் பயிற்சி எகிப்தில் உள்ள கெய்ரோ (மேற்கு) விமானப் படை தளத்தில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது.

இந்தப் போர்ப் பயிற்சியில் இந்திய விமானப் படையின் மிக்-29 போர் விமானங்கள் உள்ளிட்டவை பங்கேற்றுள்ளதாக இந்திய விமானப் படை தெரிவித்துள்ளது.

இந்தப் பயிற்சியில் இந்திய விமானப் படை பங்கேற்பது இதுவே முதல்முறை. இந்திய ராணுவத்தின் 150 வீரர்கள் அடங்கிய குழுவும் இந்தப் பயிற்சியில் பங்கேற்றுள்ளது.

21 நாள்கள் நடைபெறும் இந்தப் பயிற்சியில், அமெரிக்கா, சவூதி அரேபியா, கிரீஸ், கத்தார் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பாதுகாப்புப் படை வீரர்களும் பங்கேற்கின்றனர்.

இது குறித்து இந்திய விமானப் படை வெளியிட்ட அறிவிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: இத்தகைய போர்ப் பயிற்சி, பங்கேற்கும் நாடுகளுக்கு இடையே எல்லைகளைக் கடந்து பிணைப்பை ஏற்படுத்துவதுடன், அவற்றுக்கிடையேயான பாதுகாப்பு ரீதியிலான உறவை மேலும் வலுப்படுத்துகிறது. போர்ச் சூழல்களில்

இந்தியாவின் மிக்-29 போர் விமானங்கள் பங்கேற்பு


எகிப்தில் தொடங்கியுள்ள போர்ப் பயிற்சியில் பங்கேற்றுள்ள இந்திய ராணுவ வீரர்களின் குழு.

திட்டமிடுவதிலும் அவற்றைச் செயல்படுத்துவதிலும் கூட்டுப் படைகளுக்குப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரியில் குடியரசுத் தின விழாவில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற எகிப்து அதிபர் அப்தெல் ஃபட்டா எல்-சிசியின் இந்திய பயணத்தைத் தொடர்ந்து, இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு உத்தி ரீதியிலான உறவாக மாறியது.

இதைத் தொடர்ந்து, பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஜூன் மாதம் எகிப்துக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, உத்தி ரீதியிலான உறவைப் பலப்படுத்த இரு நாடுகளும் முடிவு செய்தன.

பாதுகாப்பு, ஒத்துழைப்பு ஆகியவற்றில் இரு நாடுகளுக்கு இடையேயான நட்புறவு கடந்த சில ஆண்டுகளாக வளர்ச்சியடைந்து வருகிறது.

இந்தியாவின் தேஜஸ் போர் விமானம், ரேடார், ராணுவ ஹெலிகாப்டர் ஆகியவற்றைக் கொள்முதல் செய்ய எகிப்து ஆர்வம் காட்டி வருகிறது.